Good Food, Good Life

**நெஸ்லே லங்கா நிறுவனம் MAGGI Ricey இனை அறிமுகப்படுத்தியுள்ளது**

*அதிசிறந்த உள்நாட்டு அரிசி மற்றும் அற்புதமான சுவைமிக்க சிக்கன் கறி ஆகியவற்றின் சிறப்பை வழங்கி இலங்கை நுகர்வோருக்கு பூரிப்பளிக்கின்றது*

போஷாக்கு, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றில் உலகில் முன்னணியில் திகழும் ஒரு நிறுவனமான நெஸ்லே MAGGI Ricey என்ற சுதேசியச் சிறப்புடைய MAGGI நூடில்ஸ் வகையை அண்மையில் இலங்கையில் அறிமுகப்படுத்தி வைத்துள்ளது. சுவைமிக்க, போஷாக்கு நிறைந்த இந்த நூடில்ஸ் உற்பத்தி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அதிசிறந்த அரிசி மற்றும் இலங்கையில் அனைவராலும் விரும்பப்படுகின்ற சிக்கன் கறிச் சுவை ஆகியவற்றின் இணைப்புடன் தயாரிக்கப்படுகின்றது.

*''உலகப் புகழ்பெற்ற நெஸ்லே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அணியின் ஆதரவுடன் எமது உள்நாட்டு அணியினரால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த MAGGI Ricey நூடில்ஸை அறிமுகப்படுத்துவதில் நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை மக்களின் சுவை மற்றும் போஷாக்குத் தேவைகளை பிரத்தியேகமாக ஈடுகட்டும் வகையில் MAGGI Ricey நூடில்ஸ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டிலுள்ள எமது நுகர்வோர் தொடர்பான ஆழமான புரிந்துணர்வின் அடிப்படையில் MAGGI என்ற எமது வர்த்தகநாமத்தின் கீழ் செழுமைமிக்க அதிசிறந்த இலங்கையின் அரிசி மற்றும் சிக்கன் கறிச் சுவை ஆகியவற்றின் கலவையாக இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சமீபத்தைய இந்த MAGGI நூடில்ஸ் புத்தாக்கத்துடன் நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான MAGGI பிரியர்களை பூரிப்படையச் செய்வதை நாம் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்''* என்று நெஸ்லே லங்கா பீஎல்சீ நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. அலொய்ஸ் ஹொவ்பவர் அவர்கள் குறிப்பிட்டார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒரு உற்பத்தி என்ற வகையில் உள்நாட்டு அரிசி உற்பத்தியாளர்களால் அறுவடை செய்யப்படுகின்ற அதிசிறந்த தரத்திலான அரிசியை உபயோகித்து இது உற்பத்தி செய்யப்படுவதுடன், அதன் மூலமாக அந்த அரிசி உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்திற்கும், ஒட்டுமொத்த கிராமியப் பொருளாதாரத்திற்கும் எம்மால் சிறந்த பங்களிப்பையும் வழங்கமுடிகின்றது. *''நெஸ்லே நிறுவனம் மற்றும் சமூகத்திற்கிடையில் பகிரப்பட்ட பெறுமதியைத் தோற்றுவிப்பதே எமது வியாபாரத் தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற தனித்துவமான பாணி''* என்று திரு. ஹொவ்பவர் அவர்கள் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

அனைத்து வகையான MAGGI நூடில்ஸ் உற்பத்திகளின் உற்பத்தி அளவுகளை விரிவுபடுத்தும் முகமாக இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நூடில்ஸ் உற்பத்தி இயந்திரத்தொகுதியொன்றை நெஸ்லே நிறுவனம் ஆரம்பித்துவைத்துள்ள நிலையில் இந்த உற்பத்தியின் அறிமுகம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. சமூகத்தில் பலருக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்கி அதன் மூலமாக கிராமிய அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குவதற்கான வாய்ப்பையும் இந்த நூடில்ஸ் உற்பத்தி இயந்திரத்தொகுதி நெஸ்லே நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

*''1984 ஆம் ஆண்டு முதல் MAGGI 'டூ மினிட்' நூடில்ஸ் இலங்கையர்களுக்கு தலைமுறை தலைமுறையாக பூரிப்பை ஏற்படுத்தி வந்துள்ளது''* என்று நெஸ்லே லங்கா பீஎல்சீ நிறுவனத்தின் உணவுப் பிரிவுக்கான உதவித் தலைமை அதிகாரியான பிரியதர்ஷினி கருணாரட்ண அவர்கள் குறிப்பிட்டார். *''இலங்கையர்களின் வீடுகளில் அனைவராலும் விரும்பப்படுகின்ற மற்றும் அனைவரினதும் நம்பிக்கையை வென்றெடுத்துள்ள MAGGI அனைத்து வயது மட்டங்களையும் சார்ந்த நுகர்வோருக்கு ஏற்ற வகையில் கடந்தகாலங்களில் பல்வேறுபட்ட சுவைக்கலவைகளுடன் கிடைக்கப்பெற்று வளர்ந்தோர் மற்றும் சிறுவர் என இலங்கையில் அனைவரின் இதயங்களையும் வென்றெடுத்துள்ளது. நுகர்வோர் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையைத் தொடர்ந்தும் தக்கவைப்பதை சிறப்பாக முன்னெடுத்துச் செல்கின்ற ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில் எமது நுகர்வோரின் உணவு முறைகள் மற்றும் வாழ்க்கை முறைகளுக்கு*

*மேலும் பெறுமதிசேர்க்கும் வகையில் அவர்களை பூரிப்பிற்குள்ளாகும் முயற்சிகளை நாம் தொடர்ந்தும் மேற்கொண்டுவருகின்றோம். அந்த வகையில் உள்நாட்டில் பிரபலமான அரிசி மற்றும் சிக்கன் கறி ஆகியவற்றின் இணைப்புடன் விசுவாசம்மிக்க எமது உள்நாட்டு நுகர்வோர்களுக்காக MAGGI Ricey இனை அறிமுகப்படுத்தி வைப்பதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளோம். MAGGI Ricey உற்பத்தியின் அறிமுகத்தின் வாயிலாக நெஸ்லே நிறுவனம் உலகின் மிகவும் நவீன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சுதேசிய சுவைக்கலவைகள் ஆகியவற்றை இணைத்து வழங்குவதுடன், இந்த உற்பத்தி எவ்வித ஐயமும் இன்றி எமது MAGGI பிரியர்களின் நாவினைப் பூரிப்படையச்செய்யும்''* என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

தன்னிறைவுப் பொருளாதார அபிவிருத்தி இலக்குடன் இலங்கை பயணித்துவருகின்ற நிலையில் உணவு மற்றும் பானவகைகளை உற்பத்தி செய்வதில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மூலப்பொருட்களை பயன்படுத்தும் செயற்பாட்டை ஊக்குவிப்பதில் இலங்கை உறுதியாக கவனஞ்செலுத்தியுள்ளதற்கு அமைவாக MAGGI Ricey நூடில்ஸ் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த வருடத்தில் அரிசி உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு கண்டுள்ள நிலையில் இலங்கையில் கோதுமை மாவின் தலா வீத நுகர்வை குறைவடையச் செய்யவேண்டும் என்ற இலக்கு தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.